இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 45 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 07 – திங்கள்கிழமை 23 செப்டம்பர் 2024 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 45 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 07 - Monday 23 September 2024 - Madurai 8 Pages ₹ 5.00


### மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட

## நண்பர் கமலஹாசனின் அரசியல் பயணம் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் வாழ்த்து!

சென்னை, செப். 23-

மக்கள் நீதி மய்யம் கட்சியின் செயற்குழு, பொதுக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அக்கட்சி யின் தலைவராக கமலஹாசன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனையடுத்து முதல்வர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவராக நண்பர் கமலஹாசன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரது அரசியல் பயணம் மென் மேலும் சிறக்க வாழ்த்துவதாகக் குறிப்பிட் டார்.

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.09.2024) வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**“பகுத்தறிவுச் சிந்தனையும், சமத்துவ நோக்கமும் கொண்டு பணியாற்றிவரும் அருமை நண்பர் கமலஹாசன் அவர்கள் மீண்டும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும் அவரது அரசியல் பயணம் மென்மேலும் சிறக்கவும் என்னுடைய வாழ்த்துகள்!”**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### தனது அமெரிக்கப் பயணம் குறித்து

## பா.ஜ.க.வினர் பொய்ப் பிரச்சாரம் பரப்பி வருகிறார்கள்!

### மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, செப். 23-**

**தனது அமெரிக்க பயணம் குறித்து பா.ஜ.க.வினர் பொய்ப் பிரச்சாரங்களை பரப்பி வருகின்றனர் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் குற்றம் சாட்டியுள்ளார்.**

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி அண்மையில் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அங்கு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், “இந்தியாவில் வசிக்கும் சீக்கியர்கள் தங்கள் மத அடையாளமான தலைப் பாகை அணிவதற்கே போராட வேண்டி உள்ளதாகவும்,

இந்த பிரச்சினை அனைத்து மதத்தினருக்கும் உள்ளது என்றும் கூறினார்.



இவரது இந்தப் பேச்சுக்கு பா.ஜ.க.வினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

சீக்கியர்கள் குறித்த கருத்தை ராகுல் திரும்பப் பெற வேண்டும் என்றும் பா.ஜ.க.வினர் கோரி வருகின்றனர்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள ராகுல் காந்தி, அமெரிக்காவில் தான் பேசிய கருத்துக்கள் குறித்து பா.ஜ.க.வினர் பொய்களை பரப்பி வருவதாகத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் தான் பேசியதில் தவறு இருக்கிறதா என இந்தியா மற்றும் அமெரிக்காவில் வசிக்கும் சீக்கிய சகோதர, சகோதரிகளிடம் கேட்பதாகவும், ஒவ்வொரு சீக்கியரும் ஒவ்வொரு இந்தியரும் தங்கள் மத நடைமுறைகளை அச்சமின்றி சுதந்திரமாக பின்பற்றக் கூடிய நாடாக இந்தியா இருக்க வேண்டும் என தான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தான் உண்மையைப் பேசிவிட்டதால் பா.ஜ.க.வினரால் அதனை பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்றும் தன்னை மவுனமாக்க அவர்கள் விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ள ராகுல் காந்தி, இவ்விவகாரம் குறித்து தொடர்ந்து குரல் கொடுப்பேன் என்றும் பதிவிட்டுள்ளார்.

### முறைகேடுகளில் சிக்கியுள்ள

## ‘செபி’ தலைவர் குறித்த தகவல்களை தர மறுப்பது ஏன்?

### ஒன்றிய அரசுக்கு காங்கிரஸ் கேள்வி!

புதுடெல்லி, செப். 23-

முறைகேடு புகார்களில் சிக்கி உள்ள ‘செபி’ தலைவர் மாதபி புச்சின் நியமனம் குறித்த தகவல்களை தர ஒன்றிய அரசு மறுப்பது ஏன்? என காங்கிரஸ் கேள்வி எழுப்பி உள்ளது.

இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் தலைவராக மாதபி புச் எப்போது நியமிக்கப்பட்டார், எப்போது அந்தப் பதவிக்கு விண்ணப்பித்தார், பதவி யேற்கும் போது அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இருந்த சொத்துக்களின் விவரங்கள் மற்றும் அரசுக்கும், செபிக்கும் அவர் அளித்த உறுதிமொழி விவரங்கள், தனிப்பட்ட முரண்பாடுகள் காரணமாக மாதபி புச் விலகிக் கொண்ட வழக்குகள் விவரம் ஆகியவற்றை வழங்குமாறு ஆர்.டி.ஐ. ஆர்வலர் ஒருவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் விண்ணப்பம் அளித்திருந்தார். ஆனால் இந்த தகவல்களை தர மறுத்த செபி, இவை தனிப்பட்ட விஷயங்கள் என்று பதிலளித்தது.

இது குறித்து சமூக வலைத் தளத்தில் பதிவிட்டுள்ள காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், செபி தலைவர் குறித்த பல முரண்பாடுகள் இதுவரை வெளியாகி அதிர்ச்சி அளித்துள்ளதாகவும், ஒன்றிய அரசின் இந்தச் செயல் எரியும் தீயில் எண்ணெய் ஊற்றும் வகையில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த விவகாரத்தில் தகவல்களை வெளியிடாமல் மறைத்து, வெளிப்படைத்தன்மையை செபி கேலிக்கூத்தாக்கி உள்ளதாகவும் ஜெய்ராம் ரமேஷ் விமர்சித்துள்ளார்.

### ‘நீட்’ வினாத்தாள் கசிவு வழக்கில்

## ஜார்க்கண்ட் நீதிமன்றத்தில் இரண்டாவது குற்றப்பத்திரிகை!

### சி.பி.ஐ. தாக்கல் செய்தது!

ராஞ்சி, செப். 23 -

நாடு முழுவதும் நீட் தேர்வு நடைபெற்ற கடந்த மே 5ஆம் தேதி பீகார் தலைநகர் பாட்னாவிலுள்ள தனியார் பள்ளி விடுதியில் எரிந்த நிலையில் நீட் வினாத்தாளை பீகார் போலீசார் கைப்பற்றினர்.

இதனைத்தொடர்ந்து, பீகார் பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் நடத்திய விசாரணையில் ஜார்க்கண்ட் மாநில பள்ளியில் கேள்வித்தாள் கசிந்தது கண்டறியப்பட்டது. குஜராத், ராஜஸ்தான், டெல்லி உள்ளிட்ட பல இடங்களில் நீட் மோசடி அம்பலமானதை தொடர்ந்து நாடு முழுவதும் போராட்டம் வெடித்தது.

இதையடுத்து, நீட் மோசடி வழக்கு சி.பி.ஐக்கு மாற்றப்பட்டது. இந்நிலையில், நீட் வினாத்தாள் கசிவு வழக்கில் ஜார்க்கண்ட் நீதிமன்றத்தில் இரண்டாவது குற்றப்பத்திரிகையை சி.பி.ஐ. தாக்கல் செய்துள்ளது.

நீட் தேர்வு ஒருங்கிணைப்பாளர், தனியார் பள்ளி முதல்வர் உள்ளிட்ட 6 பேர் முக்கிய குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். தனியார் பள்ளியிலிருந்து திருடிய வினாத்தாள் பாட்னா, ராஞ்சி, பரத்பூர் ஆகிய மருத்துவக்கல்லூரிகளில் படித்து வரும் மருத்துவ மாணவர்கள் மூலம் விடை காணப்பட்டு, நீட் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு லட்சக்கணக்கில் பணம் பெறப்பட்டுள்ளது. நீட் மோசடி வழக்கில் இதுவரை 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சி.பி.ஐ. தெரிவித்துள்ளது. 150 மருத்துவ மாணவர்கள் நீட் கேள்வித்தாள் கசிவு மூலம் பயன் அடைந்து இருக்கலாம் என்றும் சி.பி.ஐ. கூறியுள்ளது.

### ரூ.1215.92 கோடி மதிப்பில் 108 பெட்டிகள் தயார் நிலை!

## சென்னையில் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ரயில்!

### உற்பத்தி நிறைவடைந்துள்ள நிலையில் சோதனை ஓட்டத்துக்கு தயார்!

சென்னை, செப். 23–

சென்னை மெட்ரோ 2ம் கட்ட வழித்தடத்தில், ஓட்டுநர் இல்லாமல் இயக்கப்படும் முதல் ரயிலின் உற்பத்தி வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 108 பெட்டிகள் தயாரிப்பதற்காக ரூ.1215.92 கோடி மதிப்பிலான ஒப்பந்தம் அல்ஸ்டோம் நிறுவனத்துடன் கையெழுத்தாகி, கடந்த பிப்ரவரி மாதம் ஆந்திராவின் ஸ்ரீசிட்டியில் உற்பத்தி தொடங்கியது.

சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது;–

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்ட வழித்தடத்தில் ஒட்டுனர் இல்லாமல் இயக்கப்படும் 3 பெட்டிகளை கொண்ட 36 மெட்ரோ ரயில்களை (மொத்தம் 108 பெட்டிகள்) வழங்குவதற்கான ஒப்பந்தம் அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனத்திற்கு ரூ.1215.92 கோடி மதிப்பில் (வரிகள் உட்பட) வழங்கியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் வடிவமைப்பு, உற்பத்தி, சோதனை, பணியாளர்களுக்கு பயிற்சி,



உதிரி பாகங்கள் வழங்கல் மற்றும் குறைபாடு பொறுப்பு போன்றவை உள்ளடங்கும். இந்த ஒப்பந்தின் கீழ், முதல் மெட்ரோ ரயிலுக்கான பெட்டிகளை உற்பத்தி செய்யும் பணியை உற்பத்தியாளர் அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனம், ஸ்ரீசிட்டியில் 08.02.2024 அன்று தொடங்கியது. ரயில் பெட்டிக்கான உற்பத்தி தொடங்கிய நிலையில் பெட்டியில் உள்ள பல்வேறு உபகரணங்களை பொருத்தும் பணிகள் நடைபெற்றன. அதனை தொடர்ந்து முதல் மெட்ரோ ரயிலுக்கான அனைத்து பணிகளும் வெற்றிகரமாக நிறைவடைந்தது. இந்நிலையில், ஒட்டுனர் இல்லா முதல் மெட்ரோ ரயில், அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனத்தின் சோதனை தடத்திற்கு நேற்று (22.09.2024) மாற்றப்பட்டது.

இந்நிகழ்ச்சியின்போது, சிறப்பு முயற்சிகள் துறை முதன்மைச் செயலாளர் ஹர் சகாய் மீனா, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி, தலைமை பொது மேலாளர் ஏ.ஆர்.ராஜேந்திரன், அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அனில்குமார் சைனி மற்றும் பொது ஆலோசகலர்கள் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர். உற்பத்தியாளர் வளாகத்தில் அனைத்து நிலையான சோதனைகளும் முடிந்த பின்னர், மெட்ரோ ரயில் பூவிருந்தவல்லி பணிமனைக்கு அனுப்பப்படும். அதன் பிறகு, மெட்ரோ ரயில் கட்டம்2 வழித்தடத்தில் பல்வேறு நிலையில் சோதனை ஓட்டங்களுக்கு உட்படுத்தப்படும். அதனைத் தொடர்ந்து சட்டப்பூர்வ ஒப்புதல்களைப் பெற்ற பிறகு பயணிகளின் சேவையை தொடங்கும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடகிழக்கு பருவமழை

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை!

### மாவட்ட ஆட்சியர்களுடன் தலைமைச் செயலாளர் மேற்கொண்டார்!

**சென்னை, செப். 23-**

**வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக தலைமை செயலகத்தில், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துறை உயர் அதிகாரிகளுடன் தலைமைச் செயலாளர் முருகானந்தம் நேற்று காணொலி காட்சி மூலமாக ஆலோசனை நடத்தினார்.**

வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையின்போது பாதிக்கப்பட்ட பகுதிகளை முன்கூட்டியே அறிந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர்களை தலைமைச் செயலாளர் முருகானந்தம் அறிவுறுத்தினார்.

**பல்துறையுடன் ஆலோசனை!**

அப்போது அவர் கூறியதாவது:

மண்டல அளவிலான பல்துறை ஒருங்கிணைப்பு ஆய்வுக் கூட்டங்களை நடத்த வேண்டும். குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கான விழிப்புணர்வு மற்றும் பேரிடர் குறித்த கூட்டம் நடத்தப்பட வேண்டும். சென்னையில் நெடுஞ்சாலை, நீர்வளத்துறை, சென்னை மாநகராட்சி, மெட்ரோ ரயில் மூலம் நடைபெறும் பணிகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டும். புதிய பணிகளுக்காக சாலைகளைத் தோண்டக்கூடாது. ஏற்கெனவே சாலைகளில் தோண்டிய பள்ளங்களை விரைவாக மூட வேண்டும்.

**படகுகளை தயார் நிலையில் வைத்திடுக!**

வருவாய்த் துறை, காவல்துறை, மீன்வளத் துறையை பேரிடர் மீட்பு மற்றும் எச்சரிக்கை பணிகளுக்குத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பேரிடர் மீட்பு உபகரணங்கள், வாகனங்கள், நீர் இறைப்பான்கள், படகுகளை பருவமழை தொடங்கும் முன்பே தாழ்வான பகுதிகளில் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

**வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!**

வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையைப் பின்பற்றி, மழைதொடங்குவதற்கு முன்பாக மாநிலத்தில் அதிக பாதிப்புகளுக்குள்ளாகும் பகுதிகளில் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை நிலைநிறுத்த வேண்டும். பொதுமக்களுக்குப் புரியும்படி பகுதி வாரியான வானிலை தகவல்களை வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.